36 per cent interest is being charged by them and whereas they go to most of the unfortunate Government servants before the latter draw their salary on the first of every month and threaten them, what steps will this Government take to protect such kind of unfortunate Government servants?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இதைச் சீர்குலைக்கும் வகையில் ஒருசிலர் ஈடுபடுகிற முயற்சியில் பணம் வாங்குகின்றவர்களும் அவர்களோடு ஒத்துழைக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆனாலும் சரியாக நடந்து கொள்ளாதவர்கள் மீது அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். எஸ். மணி: பட்டாணியர்களுக்கு ஆறுமாதக் கடன்காரர்கள் என்று பெயர் இருக்கிறது. 100 ரூபாய் கடன் கொடுத்துவிட்டு 300 ரூபாய் கடன் வாங்கியதாக லெட்ஜரில் கணக்கு எழுதுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: லெட்ஜர் வைத்திருக்க வேண்டும், ரசீது வைத்திருக்கவேண்டும். இதிலே தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் 16 பட்டாணியர்கள் லைசென்ஸ் இல்லாமல் தொழில் நடத்தியதாகக் கேள்விப்பட்டு அதற்குத் தகுந்த நடவடிக்கையைக் கலெக்டர் அவர்கள் எடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மின்சார வரி குறைப்பு

* 308 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனல் மின்சாரப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு சமீபத்தில் தமிழக அரசு 10 சத மின்சார வரி ரத்து செய்ததா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஆம். மின்சாரப் பகுதியிலுள்ள உயர்திறன் மின்சக்தி உபயோகிக்கும் தொழிற்சாலைகள் செலுத்தி வந்த 10 சதவிகிதம் வீதம் வரி 19—11—1969-லிருந்து நீக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

* 293 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?